www.Padasalai.Net www.CBSEtips.in

FM
11 - ஆம்வகுப்பு

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2023
## வணிகவியல்

காலம் : 1.30 மணி
மதிப்பெண்கள் : 45

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (10 X 1 = 10)

1. இடத் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை இ. விளம்பரம் ஈ. காப்பீடு

2. மருத்துவர் தொழில் என்பது ________
அ. வேலைவாய்ப்பு ஆ. தொழில் இ. சிறப்புத் தொழில் ஈ. தனியார் வணிகம்

3. ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ. பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ. செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ. தொடர்முறை உற்பத்தித் தொழில் ஈ. ஒன்று திரட்டும் உற்பத்தி தொழில்

4. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ.தனியாள் வணிகம் ஆ.கூட்டாண்மை இ.கூட்டுறவுச் சங்கம் ஈ.நிறுமம்

5. ____ சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.
அ. இந்துச் சட்டம் ஆ. மிடாக்சரா சட்டம் இ. தயாபாகா சட்டம் ஈ. மேற்கண்ட யாவும்

6. நிறுமச் சட்டத்தின் அட்டவணை – அ (Table – A) என்பது
அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

7. நுகர்வோர் கூட்டுறவு __________ முதன் முதலாக வெற்றி பெற்றது
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

8. கோகோ – கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்? அ. பன்னாட்டு நிறுமம்
ஆ. அரசு நிறுமம் இ. இணை நிறுமம் ஈ. பொதுத்துறை நிறுமம்

9. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது அ. லாபம் ஈட்டுவது
ஆ. வேலை வாய்ப்பை உருவாக்குதல் இ. மக்களுக்கு சேவை செய்தல் ஈ. மேற்கூறிய அனைத்தும்

10. கூற்று (A):RBI 20 மாநிலத் தலைநகரங்களில் 20 வங்கிக் குறைதீர்ப்பாளரை நியமித்துள்ளது.
காரணம் (R): இந்தியாவில் வங்கிகள் வழங்கும் சில சேவைகள் தொடர்பான வாடிக்கையாளர் புகார்களுக்கு விரைவான மற்றும் செலவு இல்லாமல் தீர்வு வழங்குவதற்காக.
அ) A மற்றும் R சரியானது மற்றும் A க்கு R சரியான விளக்கம்
ஆ) A மற்றும் R சரியானது மற்றும் R என்பது A க்கு தவறான விளக்கம்
இ) A சரியானது ஆனால் R தவறானது ஈ) A தவறானது ஆனால் R சரியானது

II குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 17 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (5 * 2 = 10)

11. வங்கியின் பொருளை எழுதுக.
12. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
13. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
14. கர்த்தா என்பவர் யார்?
15. வணிகம் பொருள் தருக.
16. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன?
17. மருத்துவர் ஆலோசனைக் கட்டணமாக ரூ.1000 வசூலிக்கிறார். இது ______ செயல்பாடுகள்.

III குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 24 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். (5 * 3 = 15)

18. ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள் என்ன? (ஏதேனும் மூன்று)
19. தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன?
20. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.
21. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
22. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் – விளக்குக.
23. அரசு நிறுமம் என்றால் என்ன?
24. ராம் என்பவர் புறா வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டு அதில் லாபம் ஈட்டுகிறார். இது எவ்வகையான தொழில்?

IV குறிப்பு: அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும். (2 * 5 = 10)

25. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (அல்லது) தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?
26. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (அல்லது) பன்னாட்டுத் நிறுமத்தின் நன்மைகளை விவரி.

**FM 11 - COMMERCE SINGLE PAGE**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with CamScanner

**+1வணிகவியல் முதல்பருவத்தேர்வு -மதுரை (மா) ஆக22**

1.(அ) போக்குவரத்து
2.(இ) சிறப்புத் தொழில்
3.(இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்
4.(அ) தனியாள் வணிகம்
5.(ஆ) மிட்டாக்சரா சட்டம்
6.(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
7.(அ) இங்கிலாந்து
8.(அ) பன்னாட்டு நிறுமம்
9.(இ) மக்களுக்கு சேவை செய்வது
10.(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) (A) விற்கு சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

**11. வங்கியின் பொருள்:** 1949ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தின் படி "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ, கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ பொது மக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல்" எனப்படும். அப்பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம், வங்கி ஆகும் என வரைவிலக்கணம் கூறுகிறது.

**12. இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு 28 நெசவாளர் உறுப்பினர்களுடன் "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" (இராக்டேல் முன்னோடிகள் சங்கம்) என்ற பெயரில் தொடங்கினார்.

**13. பட்டய(அ) சாசன நிறுமம்:** ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன. வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின் படி இவை செயல்படும்.

**14. கர்த்தா:** இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" அல்லது "மேலாளர்" என்று பெயர்.

**15. வணிகம் பொருள் தருக.** பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

**16. மனித செயல்பாடுகள்:** மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.

**17.** மருத்துவர் ஆலோசனை கட்டணமாக ரூ 1000 வசூலிக்கிறார். இது **பொருளாதார / சிறப்புத் தொழில்** செயல்பாடாகும்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

**18. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள் ஏதேனும் 3**

இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை மூன்று தலைப்புகளில் தொகுக்கலாம்.

1. **தலைமை மற்றும் மேற்பார்வைப் பணிகள்**
2. **பாரம்பரியப் பணிகள் மற்றும்**
3. **மேம்பாட்டுப் பணிகள்**

உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-
இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-
பணவியல் உச்ச நிலை அதிகாரி:-
பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-
புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-

**19. தயாரிப்பாளர்கள் (உற்பத்தியாளர்) கூட்டுறவுச் சங்கம்:** உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது, உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகும்.
உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து, உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில், உற்பத்தி செய்த முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம்.
இவ்வகை உற்பத்தி சங்கங்கள், செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன.
**எகா:-** கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம்.

**20. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி**

**இந்துச் சட்டத்தின் படி கட்டுப்படுத்துதல்:-** இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின் படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

இந்து சட்டத்தின் 2 பிரிவுகள் தயாபாகா, மிட்டக்சரா

**மேலாண்மை:-** இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" ஆவார். அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.

**பிறப்பால் உறுப்பினர்:-** இக்குடும்பத்தில் உறுப்பினராக அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக

21. **வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

22. **மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் -** பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களாகும். மேலும் அங்கு அங்காடிகளையும், பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

23. **அரசு நிறுமம்:** பொதுத்துறை நிறுவனங்கள், இந்திய நிறுமச் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்தால் அது அரசு நிறுமம் எனப்படும். இவ்வகை நிறுமங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்கு சொந்தமானது.

இந்திய நிறுமச் சட்டம் 1956 பிரிவு 617-ன் படி அரசு நிறுமங்கள் என்பது செலுத்தப்பட்ட மூலதனம் 51% க்கு மேலாக மத்திய அரசு மாநில அரசு அல்லது மாநில அரசுகள் பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் வைத்திருந்தால், அவற்றையே அரசு நிறுமங்கள் என்று அழைக்கப்படும். எகா:- BHEL, IOC

24. ராம் என்பவர் புறா வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டு அதில் இலாபம் ஈட்டுகிறார் - **மரபுசார் தொழில்**

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.**

**ஆள்சார் தடை:-**

உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-**

பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-**

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-**

சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**நிதித்தடை:-**

உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

**25.ஆ. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?**

**தனிநபர் உரிமை:-** இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-** தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-**
இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**26.அ. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**பெயர் குறித்த உட்பிரிவு:-** நிறுவனத்திற்கு சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் “வரையறுக்கப்பட்டது” என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.

**இடங்குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கம் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.

**பொறுப்புக் குறித்த உட்பிரிவு:-** பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

**முதல் குறித்த உட்பிரிவு:-** நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்த பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைப்பு குறித்த உட்பிரிவு:-** பங்குதாரர்கள் தாங்கள் ஒருங்கிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

**26.ஆ. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:**

**குறைந்த பட்ச கூலி:-** குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-** வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-** பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-** இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-** இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com